பதிவு அஞ்சல் மூலம்

நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்
திருமதி. ர. ராணி, பி.இ.,
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
சேலம் மாவட்டம்.
6, சன்னதி தெரு, சுப்ரமணியநகர்,
சூரமங்கலம், சேலம் – 636 005.
தொலைபேசி எண்: 0427-2448625
Email id: ddslmregion@gmail.com

பெறுநர்
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.),
ஆத்துார் ஊராட்சி ஒன்றியம்,
ஆத்துார் வட்டம்,
சேலம் மாவட்டம்.

ந.க.எண்.1928/2020/சேமா–3 நாள்.16.09.2021

ஐயா,

பொருள்: மனைப்பிரிவு – சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – சேலம் மாவட்டம் – ஆத்தூர் வட்டம்/ஊராட்சி ஒன்றியம் – கல்பகனூர் ஊராட்சி/கிராமம் – ச.எண் 253/1பி, 324/1பி, 325/1பி, 2பி, 3பி–ல் 4.37 3/4 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. மனுதாரர் கடிதம் மற்றும் இணைப்புகள் இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள் 29.07.2020 மற்றும் 13.09.2021.
2. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 28.08.2020 மற்றும் 06.09.2021.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 19799/2020/போ நாள் 24.12.2020.
4. வட்டார வளர்ச்சி அலுவலர், ஆத்துார் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.எண்.136/2021/தி2 நாள் 23.08.2021.
5. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.04.06.2004.
6. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 04.05.2017.
7. அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020.
8. அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 23.09.2020.
9. அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ.4(1) நாள் 09.12.2020.
10. அரசு கடிதம் எண் 19113/நவ4(3)/2017–1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 30.08.2017.
11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 13686/2017/எல்ஏ1, நாள் 08.09.2017.
12. தானபத்திர ஆவண எண் 1063/2021 நாள் 08.03.2021 மற்றும் தானபத்திர ஆவண எண் 1064/2021 நாள் 08.03.2021.

1. சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம்/ஊராட்சி ஒன்றியம், கல்பகனூர் ஊராட்சி/கிராமம் ச.எண் 253/1பி, 324/1பி, 325/1பி, 2பி, 3பி–ல் 4.37 3/4 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி கோரி பார்வை 1–ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதிக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, பார்வை 2–ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள் 28.08.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் அனுமதி வழங்கப்பட்டது. பார்வை 4–ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானபத்திர எண்.1063/2021 நாள் 08.03.2021 மற்றும் **TANGEDCO–** விடம் தானமாக தானத்திர எண்.1064/2021 நாள் 08.03.2021ல் ஒப்படைக்கப்பட்டு தானபத்திர நகல்கள் பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ./மா.(சே)எண்.96/2021** என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண். 9(ஆ)–ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனை</u>

1. (a) பார்வை 9–ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 7–ல் கண்ட TNCDBR-2019 விதி எண் 47 (11)–ன்படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of local body shall be issued to the applicant directly.

   (b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the local body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண் 16, நகராட்சி நிர்வாகம்

மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் **31.01.2020**ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 10 மற்றும் 11–ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department Dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation and Development) Act 2016. The promoter has to advertise market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. பார்வை 6–ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதி அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண் 3–ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1,000/– ஐயும் மற்றும் விதி திண் 9–ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

<u>நிலப்பயன் மாற்றம் கணக்குத் தலைப்பு</u>

0217 Urban Development
60 Other Urban Development Schemes
800 Other receipts
AS - Receipts under land use conversion charges-27
Non Taxation fees – 09 collections.
(DPC:0217-60-800-AS-2790)

பார்வை 2–ல் கண்ட **06.09.2021** நாளிட்ட கடிதம் வாயிலாக நன்னிலை வரி கட்டணம், OSR கட்டணம், கொடிநாள்நிதி மற்றும் TB Fund ஆகிய கட்டணங்கள் உரிய அரசு கணக்குத் தலைப்பில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு நிபந்தனைகள், வரைபடங்கள் மற்றும் தானபத்திரம் அசல் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.), ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், மனுதாரர் மேற்கொண்டு உத்தரவு பெற வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.), ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

16/9/2021

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
சேலம் மாவட்டம்.

16/9/2021 16/9/21 16/09/2021

இணைப்பு

1. வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் (2 தொகுப்பு)
2. தானபத்திர ஆவண எண் 1063/2021 நாள் 08.03.2021

நகல்

| | | |
|---|---|---|
| 1 | திரு. எம். சஞ்சய்,<br>க.எண்.15சி,<br>வித்யாலயா ரோடு,<br>சேலம் டவுன்,<br>சேலம் வட்டம்,<br>சேலம் மாவட்டம். | (கடிதம் மட்டும்) |
| 2 | இருப்புக் கோப்பு | (வரைபடம்–1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1) |
| 3 | கோப்பு | (வரைபடம்–1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1) |
| 4 | Tamil Nadu Real Estate Regulatory Authority (TNRERA),<br>No.1A, 1st Floor,<br>Gandhi Irwin Bridge Road,<br>Egmore, Chennai - 600 008. | (வரைபடம்–1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1) |
| 5 | சார்பதிவாளர்,<br>பெத்தநாயக்கன்பாளையம்<br>சார்பதிவாளர் அலுவலகம்,<br>சேலம் மாவட்டம். | (வரைபடம்–1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1) |
| 6 | உதவி இயக்குநர்,<br>நில அளவை துறை,<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்,<br>சேலம் மாவட்டம். | (வரைபடம்–1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1) |
| 7 | மேற்பார்வை பொறியாளர்,<br>தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம்,<br>சேலம் மாவட்டம். | (வரைபடம்–1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1)<br>தானபத்திரம் ஆவண எண் 1064/2021 நாள் 08.03.2021–ன் அசல் |

ஆத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு. க. செந்தில்

ந.க.எண். 136/2021/தி2 நாள்: 7.10.2021

பொருள் : மனைப்பிரிப்பு அங்கீகாரம் ஆத்தூர் வட்டம் கல்பகனூர் கிராம ஊராட்சி சர்வே எண் .253/1பி, 324/1பி, 325/1பி, 325/2பி மற்றும் 325/3பி –இல் 4.3775 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப திட்ட அனுமதி வழங்கப்பட்டது – இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடல்

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்.138 ,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளரச்சி (ந.வ.4 (3)) –த்துறை, நாள். 04.06.2004.
2. அரசாணை (நிலை) எண்79. , வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளரச்சி (ந.வ.4 (3)) –த்துறை, நாள்.04.05.2017
3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,சேலம் அவர்களின், கடித ந.க.எண்.1928/2020/ சேமா3, நாள்.28/08/2020.
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு துறை சேலம் அவர்களின், உத்தரவு ந.க.எண்.1928/2020/ சேமா–3, ம.வ./மா(சே)எண். 96/2021, நாள்.16.09.2021.
5. தானப்பத்திர ஆவண எண். 1063/2021 ,நாள்.08.03.2021.
6. தானப்பத்திர ஆவண எண்.1064/2021 ,நாள்.08.03.2021.
7. கல்பகனூர் ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.10 ,நாள். 07.05.2021.
8. தனியாரால் வழங்கப்பட்ட ரூ.20 /–க்கான உறுதிமொழி பத்திரம், நாள். 04.10.2021.
9. நகர் ஊரமைப்புத் துறைக்கு உரிய கட்டணம் (3% Market Value) செலுத்தப்பட்ட சாலன் எண்.17 , நாள்.04.10.2021.

**உத்தரவு:**

பார்வை 1 மற்றும் 2 –இல் காணும் அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, சேலம் மாவட்டம், கல்பகனூர் கிராம ஊராட்சி – சர்வே. எண். 253/1பி, 324/1பி, 325/1பி, 325/2பி மற்றும் 325/3பி –இல் 4.3775 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சேலம் நகர் ஊமைப்பு துறையால், மனைப்பிரிவிற்கு வரைபட எண்ணிட்டு ம.வ./ மா(சே). எண். 96/2021 – இல் தொழில்நுட்ப திட்ட அனுமதி பார்வை 4 – ல் காணும் கடிதத்தில் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி, மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை பார்வை 6ன் படி கல்பகனூர் ஊராட்சிக்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஆத்தூர் அவர்களுக்கு தானப்பத்திரத்தின் மூலம் பெத்தநாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் தானம் செய்யப்பட்டுள்ளது.

பார்வை 7 – ல் காணும் கல்பகனூர் ஊராட்சி மன்றத் தீர்மானம் எண் 10, நாள் 07.05.2021 –இன் படி, மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை ஊராட்சி பெற்றுக்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி, சாலைகளை பொதுச்சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கும், சாலைகளை ஒப்படைப்பு செய்வதற்கும், உட்பிரிவு கட்டணத் தொகையினை செலுத்த மனுதாரால் பார்வை 8 –இல் கண்டுள்ளவாறு ரூ.20/–க்கன ஒப்புதல் பத்திரம் கையொப்பமிட்டு பெறபபட்டுள்ளது.

பார்வை 2 –இல் கண்டுள்ள அரசாணையின் படி திட்டமில்லா பகுதி அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண் 3 –ன் படி கூராய்வு கட்டணமாக ரூ.1000 /– ஐயும் மற்றும் விதி எண் 9 –ன் படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகை ரூ. 23600 /– ஐயும் சேர்த்து மொத்தமாக ரூ. 24600 /– ஐ உரிய அரசுத் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, சேலம் நகர்ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் மனைப்பிரிவு வரைபட தொழில்நுட்ப திட்ட அனுமதி ம.வ./மா(சே) எண். 96/2021 –இல் குறிப்பிட்டுள்ள கீழ்காணும் மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

மேற்காணும், நிபந்தனைகளை மீறினால் மனைப்பிரிவு அங்கீகாரம் இரத்து செய்திடவும் அதிகாரம் உள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

<u>மனைப்பிரிவு நிபந்தனைகள்</u>

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் துறையின் முன்ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.
3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.
4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட

வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR –2019 ல் குறிப்பிட்டுள்ள Residential Use –ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதி வழங்கப்படும்.

5. மனையின் ஊடே குறைத்த அழுத்த / உயர் அழுத்த மின் கம்பிப் பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிறகோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.
6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.
8. மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய உள்ளாட்சி நிர்வாக அதிகாரியிடமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப் பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு துறை மற்றும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.
9. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி / இசைவு (Planning Permission/ Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் தாங்களே இதற்கு பொறுப்பாக்கப்படுவீர்கள்.
10. மனுதாரர் நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து அனுமதி பெறப்பட்டு, உள்ளாட்சி நிர்வாக அதிகாரியிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின் படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.
12. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
14. மனைப்பிரிவு அமையும் புல எண்களில் வழக்கு ஏதும் நிலுவையில் இருப்பின் பின்னர் அறியப்பட்டால் மனைப்பிரிவிற்கு வழங்கிய ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
ஆத்தூர்.

7/10/2024

**பெறுதல்:**

திரு.எம்.சஞ்சய், க.எண்.15c,
வித்யாலயா ரோடு, சேலம் டவுன்,
சேலம் வட்டம், சேலம் மாவட்டம்.

**நகல்**

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு துறை சேலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது
2. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), சேலம். அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது
3. சார்பதிவாளர், பெத்தநாயக்கன்பாளையம், அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது